Annual Subscription Rs.100/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 34 இதழ் - 2 பிப்ரவரி - 2021

தனிப்பிரதி ரூ.10/-

## ஊழியர்கள் கவனத்திற்கு

# வேதாகம சிறப்பு வகுப்பு

கர்த்தருக்குச் சித்தமானால், எதிர் வரும் மார்ச் மாதம்
கடைசி வாரத்தில், ஏற்காடு மலையில்
**எபிரெயர் நிருபம்** பற்றிய சிறப்பு
ஆய்வு வகுப்பு நடைபெற உள்ளது

கலந்து கொள்ள விரும்பும் கர்த்தரின் சபை ஊழியர்கள்
தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்
(குறைந்த எண்ணிக்கையில்தான் அனுமதி உண்டு)

நன்றி - ஆசிரியர்

தொடர்புக்கு : 98427 30382 / 63818 20299

## ஆசானின் அறிவுரையிலே ...


| | |
|---|---|
| நிறுவன ஆசிரியர் உரை | 3 |
| வீட்டு சபை .... | 8 |
| பெண்கள் பகுதி | 13 |
| வாலிபர் பகுதி | 16 |
| சிறுவர் பகுதி | 19 |
| யார் இந்த இயேசு? | 21 |
| உன் வித்துக்கும், அவள் .... | 25 |
| மரணம் | 28 |
| உபதேசங்கள் தேவனுடையது | 32 |


- ஒன்றுக்கும் மேற்பட்ட இதழ்கள் வந்தால் எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.
- முகவரி மாற்றத்தைக் கண்டிப்பாக கடிதம் மூலம் தெரியப்படுத்தவும்.
- இந்த இதழ் மூலம் நீங்கள் அடையும் பயன்களை எங்களுக்கு
- அஞ்சல் வழியில் வேதாகமம் படிப்பவர்கள் உங்களது தொலை / அலைபேசி எண்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். தாமதத்தை தவிர்க்க இது உதவும்.

– ஆசிரியர்.

THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor / Publisher
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385

Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 34 February- 2021 Issue - 2

ஆசிரியர் உரை

## சத்தியத்தை அறியுங்கள்; சத்தியம் உங்களை விடுதலையாக்கும்

இன்றைக்குக் கிறிஸ்துவ உலகம் அசலுக்கும் போலிக்கும் தெரியாமல் குழம்பி நிற்கிறது. ஆரோக்கியமான உபதேசம் எது என்று தெரியாமல் எவர் சொன்னாலும் நாட்டுக் கொண்டு இரட்சிப்பையும் நித்தியஜீவனையும் செராமாயிருக்கின்றனர். அதைக் குறித்து வேத எழுத்துக் மியாக எவ்வளவோ எச்சரிப்பு களையும் அறிவுரைகளையும் கொடுத்து அதன் அபாயத்தை பரிசுத்த ஆவியானவர் விளக்கி இருக்கிறார்

இருந்த போதிலும் மக்கள் வேதாகமத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து வகை ஊன்றிப் படிப்பதில்லை. படித்தாலும் அதைக் கடைப்பிடிப்பதில்லை. அதற்கு என்ன காரணம்? ஒரு காலத்தில் செல்வந்தர்களும் வசதி படைத்தவர்களுமே வாங்கக் கூடிய அளவில் விலை அதிகமாக இருந்தது. ஆனால் அச்சு எந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு மலிவு விலையில் வேதாகமங்கள் கிடைத்துக் கொண்டிருக்கும் இந்த நாளிலும் கூட பெரும் பான்மையோர் வேதாகமப் படிப்பை அலட்சியம் செய்கின்றனர். சூது மதியினரும் சுய நலமிகளும் இவர்களின் மெத்தனத்தை பயன்படுத்தி வஞ்சித்து வாழ்கின்றனர். அப்படி மக்கள் அசிரத்தை யாக இருப்பதற்கு அவர்கள் சொல்லுகிற காரணங்கள் வீண்சாக்கு போக்குகளேயல்லாமல் நியாயமானவைகள் அல்ல. வேதாக மத்தை படிப்பதினால் ஏற்படும் அமைகளை அவர் உணர்ந்து கொள்ளாததே அதற்குக் காரணம், சுமார் பேது ஆண்டுகளுக்கு முன் கல்வியைப் பற்றியும் இவ்வாறே அக்கறை அற்றவர் களாகவே மக்கள் இருந்தனர். அறியாமையைப் போக்க நகம்

எடுத்துக் கொண்ட முயற்சியும், படித்து நல்ல உத்தியோகங் அமர்ந்து கை நிறைய சம்பாதித்து வாழ்க்கையில் வசதியும் சௌகரியமும் ஆக இருக்க முடியும் என்பதை விளங்கிக் கொண்ட பிறகு, இன்றைக்கு மிக மிகச் சாமானியமானவர்கள் கூட அரசு நடத்துகிற பள்ளிகளைக் கூட புறக்கணித்து விட்டு பெரும்பணம் செலவு செய்து பதிவு செய்து, பால் மறப்பதற்கு 1 பிறப்பதற்கு முன்னே கொண்டுபோய் பள்ளியில் சேர்க்கிறார்கள். குழந்தையோடு அரசாங்கங்களில் அமர்ந்து கை கரியமும் ஆக இருக்க இன்றைக்கு மிக பிள்ளைகள் பிறப்பது முன்பே கொண்டு போய் பள்ளியில் சேர்க்கிறார்கள் . குழந்தையோடு தாயாரும், சில வேளைகளில் தகப்பனாரும் பள்ளிக்குச் சென்று வருவதையும் பார்க்கிறோம். அது போதாது என்று வைத்துக் கொள்கிறார்கள். ஏனெனில் கல்வியின் நன்மைகளைப் புரிந்து கொண்டார்கள்.

அது போல வேதாகமத்தைப் படித்துத் தியானிக்கிய காணப்படுகிற மெய்ச் சமாதானம், மகிழ்ச்சி, இல்லாமையிலம். வறுமையிலும் ஒரு திருப்தி ஆகிய நற்பண்புகளைக் பார்த்தால் அவர்களுடைய மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்கும் தேவன் அவர்கள் கொண்டிருக்கிற விசுவாசமே காரணம் என்பது பரியம் ஆனால் ஏனோ மனிதகுலம் அமைதியையும் சமாதானத்தையும் விட ஆடம்பரத்திலும், பகட்டு வாழ்க்கையிலும் நாட்டம் கொண்டு அமைதியும் எளிமையும், கொண்ட வேதாகம வழிகளைப் புறக்கணித்து விட்டுத் தீமை ஜெட் செய்ய திரளாக ஜனங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கிறார்கள்.

வேதாகமத்தைப் படித்து ருசித்துப் பார்த்த சான்றோர்கள் நீங்கள் நமது வேதாகமத்தைப் படித்து தியானிப்பதன் மூலம் ஆண்டவ ருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று கூறிக் கெஞ்சி மன்றாடினாலும், ''நாங்கள் என்ன ஐயர் வேலைக்கா போகப் போகிறோம்'' என நையாண்டி செய்கிறார்கள். இது மிக ஆபத்தான போக்கு, போதகர் வேலைக்குப் போகிறவர்கள் தான் வேதாகமத்தைப் படிக்கவேண்டும், மற்றவர்கள் போதகர்கள் சொல்லுவதைக் கேட்டுக் கொண்டு வாரம் ஒரு முறை கோவிலுக்குப் போய் விட்டு வந்தால் போதும் என்பது தவறான போதனைகளின் விளைவே. நாம் ஒவ்வொருவரும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்க வேண்டும்'', என்று ரோமர் நிருபத்திலும் [ரோமர். 14:12] சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை படிக்கு நாமெல் லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் வெளிப்பட வேண்டும்'' என்று கொரிந்தியருக்கு எழுதின நிருபத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. [II கொரி. 5:10].

இவைகள் கூறுகிற உண்மை என்ன? நியாயத்தீர்ப்பு ந போதகரோ, பிஷப்போ, போப் ஆண்டவரோ, தலைமைப் நமக்காக பரிந்து பேச முடியாது. நாம் தேவனுடைய கவனமாகப் படித்து அதன்படி ஒழுகவேண்டும். அவர்கள் சொன்னார்கள், இவர்கள், உபதேசித்தார்கள் என்று சொல்லித் கொள்ள முடியாது. வசனத்தின்படிதான் தீர்ப்பு (யோவான் 12:48) வேறு சிலர் வேதாகமத்தைப் புரிந்து கொள்ளும் அளவுக்கு ஞானமில்லை. நீங்களே படித்துச் சொல்லுங்கள் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம் என்கின்றனர். இது ஒரு மாயமான தாழ்மையே. இது கம்யூட்டர் யுகம். விஞ்ஞானம் அளப்பரிய முன்னேற்றம் அடைந்து பெரும் சாதனைகளை புரிந்து கொண்டிருக்கிறது. அதன் நுணுக்கங் களையெல்லாம் கற்றுத் தேறி வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க நம்முடைய தாய் மொழியில் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற வேதாகமத்தைப் படித்து புரிந்து கொள்ள முடியவில்லை என்பது நம்பத் தகுந்த சமாதானமல்ல. எந்த ஒரு மனிதனோ மனுஷியோ எனக்கு கல்வியறிவு இல்லை. என்னுடைய ஆஸ்தி சொத்துக்களையும் நீங்களே வைத்துக் கொண்டு எனக்கு மரண பரியந்தம் உணவும் உடையும் கொடுத்துவிடுங்கள், அது போதும் என்று ஒப்படைத்து விட்டதாக நான் கேள்விப்பட்டதேயில்லை. ஆனால் ஆன்மீக விஷயத்தில் மனிதர்கள் வெகு தாராளம் எல்லாம் நீங்களே செய்துவிடுங்கள். பாட்டு, ஜெபம், பிரசங்கம் அனைத்தும் போதகர் செய்தால் சரி, ஆன்மீக காரியங்களுக்கு நாம் கொடுக்கிற முக்கியத்துவம் அவ்வளவுதான். வாழ்க நமது ஆன்மீக தாகம்.

எந்தத் தொழிலைக் கற்றுக் கொள்வதற்கும், எந்தப் படிப்பை மேற் கொள்வதற்கும் முயற்சியும் பயிற்சியும் வேண்டும். அதேபோல் வேதாகமத்தைக் கற்றுக் கொள்வதற்கும் கூட முயற்சியும் பயிற்சியும் தேவை. அவ்விதமான முயற்சிகள் ஒன்றையும் மேற்கொள்ளாமல் எப்படி ஒன்றைக் கற்றுக்கொள்ள முடியும்? இன்னும் சிலர் எங்களுக்குப் போதிய நேரம் இல்லை என்பர். இதுவும் ஒரு விதண்டாவாத சாக்குப் போக்குத் தான். ஆண்டவரே நான் உம்மைத் தொழுகிறேன். உம்முடைய வேதத்தைப் படிக்கிறேன். எல்லோருக்கும் ஒரு நாளைக்கு 24 மணி நேரம் என்றால் எனக்கு ஒரு மணி நேரம் சேர்த்துப் 25 மணி நேரமாகக் கொடும். உமக்குத் தான் எல்லாம் முடியுமே என்பது போல் உள்ளது. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும், வாய்ப்பு வசதிகளுக்கேற்ப வேதாகம தியானத்துக்காக என்று ஒரு நேரத்தை

ஒதுக்கி கொள்ள வேண்டு மேயல்லாமல் நேரமில்லை என்று பிதற்றுவது, ஆண்டவரே, உம்மைத் தொழுவதும் உமது வேதத்தைப் படிப்பதும் எனக்கு வேண்டாத வேலை என்னுடைய முக்கிய அலுவல்களை அனைத்தையும் செய்துவிட்டு சாவ காசமாக உம்மிடம் வருவேன். வராவிட்டாலும் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டு வருத்தப்படாதீர்'' என்று சொல்லாமல் சொல்கிறோம். ''முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத் தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள். அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் என்று ஆண்டவர் கூறியதற்கு எதிர்த்திசைச் சிந்தனையோட்டம், இது நியாயமா?

நண்பர்களே 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தை யினாலும் பிழைப்பான்' என்று (மத். 4:4, உபா. 8:3) சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்த முள்ளதால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று பவுலடியாரும் (1 தீமோ. 4: 8) கூறுவதின் கருத்தைச் சிந்தித்துப் பார்க்கும் போது வேதாகமத்தின் மூலம் தேவன் நமக்குத் தந்திருக்கிற ஆலோச னைகள் எவ்வளவு மேன்மையானது என்று புரியும்.

ஆணீவே, பரிசுத்த வேதாகமத்தை நாள்தோறும் படித்து தியானித்து அவைகளின்படி நடப்பது எவ்வளவு முக்கியம் என்பதை எண்ணிப் பாருங்கள். சங்கீதக்காரன் கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தை தியானிக்கிற மனுஷன் பாக்கியவான் அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும் என்கிறார். (சங். 1 :2 3) ஆகவே, வேதாகம வாசிப்பை அலட்சியம் செய்யாதீர்கள்.

வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள முற்படுபவர்களுக்கு சில முட்டுக் கட்டைகள் இருக்கின்றன என்பது உண்மை , அதனால் ஆர்வம் குன்றிப் போகிறதா என்று தெரியவில்லை அவைகளில் சில.

வேதாகமத்தின் தமிழ் நடை : பரிசுத்த வேதாகமம் தமிழ் மறு மலர்ச்சிக்கு முந்தி மொழியாக்கம் செய்யப்பட்டது. அதில் கணிச மான வடமொழிக் கலப்பு இருக்கிறது. அதனால் தற்போதைய இளைய சமுதாயம் வேதாகமத்தின் தமிழ்நடையைக் காரணம் காட்டிப் படிக்க ஆர்வமற்றவர்களாயிருக்கிறார்கள். வயதான வர்கள் வேதாகமத்தின் பொடி எழுத்துக்களைக் காரணம் காட்டி தப்பித்துக் கொள்ள முயலுகின்றனர்.

இன்னும் அநேகருடைய ஆர்வமின்மைக்குக் கீழ்க்கண்டவைகள் கூடக் காரணமாயிருக்கலாம்.

- வேதாகமம் ஒரே நூல் அல்ல, அது பல நூல்கள் அடங்கிய ஓர் நூல் நிலையம், என்ற உண்மை தெரியாமை.
- வேதாகமத்தின் மையக் கருத்து பற்றிய தெளிவின்மை.
- வரலாறு, புவியியல் பின்னணி தெரியாமை.
- பகுத்துப் படிக்கும் முறை தெரியாமை.
- வேதாகமம் நம்பத் தகுந்ததுதானா என்ற சந்தேகம்.

ஆதாம் காலத்து பேசுகிற பாம்பு, நோவா காலத்து ஜலப் பிரளயம் மோசே காலத்து செங்கடல் பிளவு, யோனா காலத்து மனிதனை உயிரோடு, விழுங்கி பின்னர் கக்கிப் போட்ட மீன் இவைகள் எல்லாம் வரலாற்று உண்மைகளா என்பதைவிட இதிகாசம் புராணங்களில் வரும் கற்பனைக் கதைகள் போன்றே உள்ளது என்று நினைப்போரும் உளர். இன்னும் சிலர் இயற்கையைப் பார்த்ததால் கடவுள் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளலாமே. பின்னே ஏன் வேதாகமத்தைப் படிக்க வேண்டும் என்று கூட சிலர் நினைக்கின்றனர். இயற்கை தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்துவது உண்மைதான் [சங் 19 : 1]ஆனால் இயற்கை தேவன் எப்படிப்பட்டவர் என்றும் அவருக்கும் மனுக் குலத்துக்கும் உள்ள உறவு எப்படிப்பட்டது என்றும் மனிதன் என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது என்றும் சொல்வதில்லையே, ஆகவே அவர் நமக்குத் தந்தருளியிருக்கிற வேதாகமத்தை வாசிக்க வேண்டும். வேதாகமத்தைப் படிப்பதினால் ஏற்படும் நன்மைகள்

- ஆத்து மாவை உயிர்ப்பிக்கிறது
- பேதையை ஞானியாக்குகிறது
- தெளிவு உண்டாக்குகிறது
- எச்சரித்தும் புத்தி சொல்லுகிறது, என்று தாவீது தமது சங்கீதப்புத்தகத்தில் கூறியிருக்கிறார். சங். 19:7 –11] அப்படிப்பட்ட தேவ இரகசியங்கள் அடங்கிய ஞானப் பெட்டகத்தைப் புறக்கணியாமல் நாள்தோறும் தனிமையாகவும் குடும்பமாகவும் வாசித்து அதன் வழியில் நடந்து ஆசீர்வாதம் பெறுவோம்.

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிற வர்களும் இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக் கொள்ளு கிறவர்களும், பாக்கியவான்கள்'' என்பது எவ்வளவு உண்மை என்பதை ருசித்துப் பார்க்கும்படி வேண்டுகிறேன். [வெளி. 1:3]

# வீட்டு சபை

Bro. J.C. சோட்

வேதாகமத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற கர்த்தருடைய சபை மீட்பாராகிய கிறிஸ்துவால் இரட்சிக்கப்பட்டு, அழைக்கப் பட்டவர்களின் கூட்டமாயிக்கிறது. இப்படி அழைக்கப்பட்ட கிறிஸ்தவர்களின் கூட்டமானது எண்ணிக்கையில் குறைந்த அளவு இருந்தாலும், அதிக அளவு இருந்தாலும் தேவனை ஆராதிப்பதற்காக எங்கெல்லாம் கூடுகிறார்களோ, அங்கே அது கர்த்தருடைய சபை என்றழைக்கப்படுகிறது.

புதிய ஏற்பாடு முழுவதுமாகப் பர்க்கும் போது சபையானது அதற்கென்று சொந்தமான கட்டிடத்தில் கூடினதாகக் குறிப்பிடாமல் இருப்பது சுவாரஸ்யமான ஒரு காரியமாக இருக்கிறது. வேதாகமத்தில், பல வித்தியாசமான இடங்களில் சபையானது கூடியிருந்தாலும், அது யாராவது ஒருவர் வீட்டில் தான் கூடியிருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆம், ரோமாபுரியிலுள்ள சகோதரர்களுக்குப் பவுல் எழுதும் போது ரோமர் 16:3–5 வசனங்களில், கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அவர்கள் என் பிராணனுக்காகத் தங்கள் கழுத்தைக் கொடுத்தவர்கள்; அவர்களைப் பற்றி நான் மாத்திரமல்ல, புறஜாதியாரில் உண்டான சபையாரெல்லாரும் நன்றியறிதலுள்ளவர்களாயிருக் கிறார்கள். அவர்களுடைய வீட்டிலே கூடி வருகிற சபையையும் வாழ்த்துங்கள். அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதற்பலனாகிய என் பிரியமான எப்பனெத்தை வாழ்த்துங்கள் என்று வாசிக்கிறோம். அதேபோல், பவுல் பிலேமோனுக்கும் இவ்விதம் எழுதுகிறார். பிலேமோன் 1–3, கிறிஸ்து இயேசுவினிமித்தம் கட்டப்பட்டவனாயிருக்கிற பவுலும், சகோதரனாகிய தீமோத்தேயும், எங்களுக்கு பிரியமுள்ளவனும் உடன் வேலையாளுமாயிருக்கிற பிலேமோனுக்கும், பிரியமுள்ள அப்பியாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்புக்கும், உம்முடைய வீட்டிலே கூடி வருகிற சபைக்கும் எழுதுகிறதாவது நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

பவுலும் மற்ற புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களும் சபையானது அதன் சொந்தக் கட்டிடத்தில் கூடினதாக எங்குமே

குறிப்பிடவில்லை ஏன்? ஏனென்றால், முதல் நூற்றாண்டில், சபையானது வளர்ச்சியின் ஆரம்பத்திலிருந்தபடியால், சபைக்கென்று இன்று நாம் கட்டிடத்தில் கூடுவது போல், கட்டிடங்கள் இல்லாமலிருந்தது. ஆம், இது எவ்வித சந்தேகமுமின்றி இன்றளவும் உண்மையாயிருக்கிறது. எப்படியெனில், ஆரம்ப நாட்களில் சபையானது இளமையானதாகவும், அதன் அங்கத்தினர்கள் குறைந்த எண்ணிக்கையிலும், ஆங்காங்கே சிதறப்பட்டவர்களும், பாடுகளைச் சுமந்தவர்களுமாய் இருந்தார்கள். ஆகையால், ஒட்டுமொத்தமாக இவைகளையெல்லாம் பார்க்கும் போது அந்நாட்களில், கிறிஸ்தவர்கள் ஒரு பிரத்யோகமான கட்டிடத்திகூ கூடியிருப்பதற்குவாய்ப்பே இல்லை என்று தான் புலப்படுகிறது. ஆனால், சபையானது வாரந்தோறும் தவறாமல் வாரத்தின் முதல் நாளிலே கூடியிருப்பதை நாம் அறிகிறோம் [அப்.20:7 கொரி 16:2]. மேலும், அன்றைய கிறிஸ்தவர்களுக்கு சிலர் சபை கூடிவருவதை விட்டுவிடுவது போல் விட்டுவிடக் கூடாது என்று கட்டளையிடப்பட்டார்கள் [எபி.10:25]. பவுல், கொரிந்துப் பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் சபைக் கூடி வருதலைப் பற்றிப் பேசுகிறார். அவர்கள் எங்கே கூடினார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால், பவுல் அவர்களிடம் புசிப்பதற்கு உங்களுக்கு வீடுகள் இல்லையா என்று எச்சரிப்பதிலிருந்து அவர்கள் ஏதோ ஒரு இடத்தில் அப்பம் பிட்கும்படி அதாவது கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறும்படி கூடி வந்திருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது [Iகொரி.11:17-22].

ஒருமுறை ஓர் ஓய்வுநாளில் அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பு பட்டணத்துக்கு வெளியே இருந்த ஆற்றங்கரைக்குச் சென்றார். அங்கே, வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து அங்கே கூடி வந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தார். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்பவளும் கேட்டுக்கொண்டிருந்தாள். பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அப்பொபது பவுல், அவளுக்கும், அவள் வீட்டாருக்கும் தேவனுடைய வார்த்தையைப் போதித்தபோது அவர்களெல்லாரும் ஞானஸ்நானத்தின் வாயிலாக கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள் [ அப்.16:12-15]. அதன் பின்பு, அவர்கள் வழக்கம் போல் ஜெபம் பண்ணுகிற இடத்திற்குப் போகையில் குறி சொல்லுகிற ஆவியையுடைய பெண்ணின் நிமித்தம் தங்கள் ஆதாயத்தைப் பெற்றுவந்த அவருடைய எஜமான்கள், நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுவின் நாமத்தில்

உனக்குக் கட்டளையிடுகிறேன் என்றதும், அந்நேரமே அந்த ஆவி புறப்பட்டுப்போயிற்று. பவுலின் இந்த வல்லமையுள்ள வார்த்தையால் தங்கள் பிழைப்பு அற்றுப் போயிற்றென்று கண்ட அவளுடைய எஜமான்கள் அவர்களை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப் பட்த்ததினிமித்தம் அவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். பின்பு அற்புதவிதமாக அவர்கள் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் சிறையில் இருந்த போது, சிறைச்சாலைக்காரனுக்கும், அவனுடைய வீட்டாருக்கும் கர்த்தருடைய வார்த்தைகளைப் போதித்த படியால் அவனும் அவன் வீட்டிலிருந்த அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள் [ அப்.16:16–34].

அப்போஸ்தலர்17–ம் அதிகாரத்தில், பவுல் அத்தேனே பட்டணத்திலுள்ள மார்ஸ் மேடையில் பிரசங்கிக்கிறார். 18–ம் அதிகாரத்தில் ஜெப ஆலயங்களில் ஆராதனைக்காகக் கூடியிருந்த யூதர்களை மனமாற்றினார்கள். மேலும், பவுல் எருசலேம் சபையின் மூப்பர்களைச் சந்தித்திருக்கிறார். ஆனால், அவர்கள் எந்த இடத்தில் சந்தித்தார்கள் என்பது சரியாகத் தெரியவில்லை. ஆனால், அப். 21:18 –ன் படி அவர்கள் யாக்கோபின் வீட்டில் கூடியிருக்க வேண்டும். பவுல் ரோமபுரிக்குச் செல்லும் வழியில் புத்தேயோலி பட்டணத்திற்குப் போய் அங்கே சகோதரரைக் கண்டு அங்கே அவர்களோடு ஏழு நாட்கள் தங்கியிருந்தார். அப்படித் தங்கியிருந்த அந்நாட்களில் அவர் ஆராதிக்காமல் இருந்திருக்கமாட்டார். கண்டிப்பாக ஆராதித்திருப்பார். அப்படியானால் எங்கே கூடி ஆராதித்தார்? நிச்சயமாக, ஏதாவதொரு சபை அங்கத்தினருடைய வீட்டில் தான் சபையாகக் கூடியிருக்கவேண்டும். ஆக, எங்கெல்லாம் ஜனங்கள் தேவனை ஆராதிக்கும்படி கூடினார்களோ அங்கெல்லாம் கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப் பட்டிருக்கிறது. இதினிமித்தம், ஜனங்கள் ஆராதிக்கும்படி ஏதாவதொரு அங்கத்தியனருடைய இல்லத்தில் தான் கூடிவந்தார்கள் என்ற தீர்க்கமான முடிவுக்கு நம்மால் வர முடியும்.

நிச்சயமாகவே ஓரிடத்தில் கூடிவரும் சபை, ஓர் இடத்தை வாங்கி அங்கே சபைகாக கட்டிடத்தைக் கட்டுவதில் எந்தத் தவறுமில்லை. அதேநேரத்தில் சபை கட்டிடம் கட்டி அதில்தான் ஆராதிக்க வேண்டுமென்றும் அவசியமில்லை. இந்த விஷயத்தில் சபைக் கட்டிடம் கட்டுவது என்பது சபை மற்றும் அங்கத்தினர்களின் தனிப்பட்ட விருப்பமாயிருக்கிறது. சபை கூடுமிடம் என்று வரும் போது அது, ஒரு பெரிய அறையிலே, ஒரு

பள்ளிக்கூடத்திலோ, ஒரு கூடாரத்திலோ, அல்லது சபை அங்கத்தினரொருவருடைய வீட்டிலோ கூடலாம். மாறாக, சபை கூடிவராமலிருக்கக்கூடாது என்று வேதம் புத்தி புகட்டுகிறது. சபை கூடி வருவதற்கான மிகச் சிறந்த இடம் சபை அங்கத்தினர்களின் வீடுதான். இது இன்றைய நாட்களில் வினோதமான ஒன்றாகத் தோன்றலாம். ஆயினும், உண்மையாயிருக்கிறது.

சிலர், சபை வீட்டில் கூடுவதைக் குறித்து விருப்பமில்லாதவர்களாகயிருக்கிறார்கள். இதற்கு முக்கியக் காரணம் விசுவாசிகள் சபை கட்டிடங்களில் கூடிப் பழகியது தான். ஆனால், சபை வீட்டில் கூடி வரும்போது அதில் பல நன்மைகள் உண்டு என்பதை ஒரு போதும் மறந்து விடக்கூடாது. ஆம், வீட்டிலே சபை கூடிவரும் போது அங்கே தனிப்பட்ட ரீதியாகவும், நட்பு ரீதியாகவும் ஒரு நெருக்கமான ஐக்கியம் அங்கத்தினர்களிடையே ஏற்படும். வீடுகளில் சபை கூடிவரும் போது ஒரு வேளை வசதிகள் குறைவாக இருந்தாலும், சபை அங்கத்தினர்களின் அயலகத்தார் அங்கே வந்து கலந்து கொள்வதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு. இவர்கள், இப்படியாகக் கூடிவரும் போது காணிக்கை அதிகமாக வருவதில்லை அதே நேரத்தில் செலவுகளும் அதிகமாக வருவதில்லை. காலப்போக்கில் அங்கத்தினர்களின் வளர்ச்சியைப் பொறுத்து, ஆங்காங்கே கூடுவதா அல்லது ஒரு அறையை வாடகைக்கு எடுத்து அதிலே கூடுவதா அல்லது சொந்தமாகவே கூடுமிடத்திற்கென்று ஒரு கட்டிடத்தைக் கட்டுவதா என்று அங்கத்தினர்கள் எல்லாம் சேர்ந்து முடிவெடுக்க வேண்டும். ஒரு வேளை, ஒரு உள்ளூர் சபையால், சொந்தமாக வாங்க முடியவில்லையென்றால் அதை ஒரு பொருட்டாக எண்ண வேண்டியதில்லை.

இன்னும், வீடுகளில் தேவனை ஆராதிப்பதினால், சபை, அங்கத்தினர்கள் தாங்கள் வாழும் இடத்திலேயே சகோதர சகோதரிகளாக ஒன்று கூட முடியும். இதினிமித்தம் போக்குவரத்துச் செலவுகளையும், அசௌரியங்களையும் குறைக்க முடியும். இது சபையில் வளர்ச்சிக்கு உந்து சக்தியாக இருக்கும். மேலும், ஆங்காங்கே உள்ளூர் சபைகளை ஏற்படுத்தி பணியை விரிவடையச் செய்ய முடியும். இப்படிச் செய்வதால் சபையின் எல்லா அங்கத்தினர்களும் இணைந்து சபையாக வேலை செய்யவும். அங்கத்தினர்கள் ஒவ்வொரு வரிடமும் ஐக்கியமாக இருக்கவும். இது அவர்களை உற்சாகப்படுத்தவும்.

ஓர் உள்ளூர் சபை அங்கத்தினர்களில் ஒருவருடைய வீட்டில் கூடுகிறதாக இருந்தால் அது யாருடைய வீட்டில் கூட வேண்டும்? இது, சபை அங்கத்தினர்களை பொறுத்தது தான். மேலும், அந்த வீட்டின் அளவு அது அமைந்திருக்கம் இடம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அதன் பொருள் சபை யாருடைய வீட்டில் கூடுகிறதோ அவருடையது என்பதல்ல. மாறாக, சபை கூடிவருகிற வீட்டிலுள்ள அங்கத்தினர்கள் வெளியூருக்குச் சென்று விட்டால், அங்கத்தினர்களில் வேறொருவரின் வீட்டில் சபை தற்காலிகமாகக் கூடிவரலாம். இதனடிப்படையில், சபை ஒரு குறிப்பிட்ட இடத்திலோ அல்லது வீட்டிலோ கூடினாலும் கூட, சபையானது ஆண்டவராகிய இயேசுவுக்கு மட்டுமே சொந்தம் என்பதை நாம் ஒரு போதும் மறந்துவிடக்கூடாது. அவர் தான் சபைக்குத் தலையாகவும் இரட்சகராகவும் இருக்கிறார்.

கர்த்தருடைய சபை ஒருவருடைய வீட்டில் கூடுகிறதென்றால், அதைவிட கனத்திற்குரிய காரியம் அவ்வீட்டாருக்கு வேறென்ன இருக்க முடியும்? கிறிஸ்துவின் சபை அங்கமாக சக கிறிஸ்தவர்களோடு தங்களுடைய வீட்டில் தேவனை ஆராதிப்பது மகத்தான ஆசீர்வாதமாகும். ✝

---

**கிறிஸ்துவத்தை எப்பஜ வெளிப்படுத்துவது**

- ✻ குடும்பத்தில் - அன்பாலும், தன்னலமற்ற தன்மையாலும்
- ✻ வியாபாரத்தில் - நேர்மையினாலும், கவனத்தாலும்
- ✻ சமுதாயத்தில் - தயவாலும், தாழ்மையினாலும்
- ✻ பெலவீக்களிடத்தில் - பொறுமையினாலும், உதவியினாலும்
- ✻ துன்மார்க்கக்கரிடதத்தில் - நிதானத்தாலும், தீமையை வெல்லுவதாலும்.

பெண்கள் பகுதி

# தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது எது?

Sis. ரேச்சல் இராஜநாயகம்

**கி**றிஸ்துவுக்காய் வாழ்வதென்பது சுலபமான காரியம் அல்ல. தேவன் போதித்த அவருடைய வார்த்தையின் படி வாழும் போது, நம்மை சுற்றிலும் உள்ளவர்களின் வாழ்க்கையை விட நம்முடைய வாழ்க்கை மிகவும் வித்தியாசமாகக் காணப்படும். ஆனால் நம்முடைய பிதாவாகிய தேவன் தம்முடைய கிருபையினின்று நம்மை விலக்கி விடுவதில்லை. இந்த உலகத்தின் சோதனையிலும், வேதனை நேரங்களிலும் சாத்தானை மேற்கொள்ள அவர் பல ஆயுதங்களை நமக்குக் கொடுத்திருக்கிறார். அவருடைய வல்லமையுள்ள வார்த்தைகளே அந்த ஆயுதம்.

தேவன், இயேசுவைப் போல் நாம் ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். கிறிஸ்து தனக்கு சோதனை வந்தபோது அதை எவ்வாறு மேற்கொண்டார்? 40 நாள் உபவாசத்திற்கு பிறகு உடல் சோர்ந்த நிலையில் பிசாசு அவரை சோதித்தான். ஒவ்வொரு முறையும் தேவனுடைய வார்த்தைகளைக் கொண்டு அவனை ஜெயித்தார். நாமும் கூட ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் பிரச்சினைகளில் சோர்ந்து போகாமல் அவருடைய வல்லமையுள்ள வார்த்தைகளை ஆயுதங்களாகக் கொண்டு அவைகளை ஜெயிக்க வேண்டும்.

சரி, நம் தலைப்பிற்கான பகுதிக்கு இப்போது வருவோம். 1 பேதுரு 3ம் அதிகாரம் 1-6 வசனங்கள், அவிசுவாசியான கணவனைக் கொண்டுள்ள பெண்ணுக்கு ஆலோசனையாகக் கொடுக்கப்பட்டாலும், இது அனைத்துப் பெண்களுக்கும் பொருந்தினதாக அமைகிறது. - 4ம் வசனத்தில் தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றதாக கூறப்படுபவை சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியும்.

இன்று அநேகர் நினைத்துக் கொள்கிறார்கள். சாந்தமாய் இருப்பதென்பது ஏமாந்த தன்மை என்று. அவர்களுக்கு பலமான குணங்கள் இராது என்றும் கோழை மனதுடையவர்கள் என்றும் விளக்கம் தருவார்கள். அவர்கள் தைரியமும், சுய நம்பிக்கையும் இல்லாதவர்கள் என்று நினைத்துக் கொள்வார்கள்.

ஆனாலும் நம்முடைய தகப்பன் சொல்கிறார். சாந்தமுள்ள பெண் அவருடைய பார்வையில் விலையேறப்பட்டவள் என்று

விலையேறப்பட்டவள் மட்டுமல்ல, மிகவும் விலையேறப் பட்டவள்.

மத்தேயு : 11 ; 29–ல் இயேசு கிறிஸ்து கூறும் போது நான் சாந்தமும், மனத் தாழ்மையுமாய் இருக்கிறேன் என்கிறார். நம்முடைய ரட்சகராகிய இயேசுகிறிஸ்து பலவீனரல்ல. தைரியமும், தன்னம்பிக்கையு மில்லாமலில்லை. அதை நாம் எப்படி அறிவோம்? 40 நாட்கள் உபவாசித்து இளைத்துப் போன நிலையில் அவர் சாத்தானை மூன்று முறை முறியடித்தார் அல்லவா? எப்படி? எந்த ஆயுதத்தை அவர் பயன்படுத்தினார்? தேவனுடைய வார்த்தையையே பயன்படுத்தினார். மூன்று முறை அவர் எழுதியிருக்கிறதே என்று கூறினார். எனவே நம் இரட்சகர் சாந்தமானவர். ஆனால் பலவீனரல்ல.

சாந்த குணத்தை தேவன் எப்படி விவரிக்கிறார்? சாந்த முள்ளவள் என்பவள் தாழ்மையானவள். மற்றவர்களுக்காக தன் விருப்பத்தை விட்டுக் கொடுப்பவள். சாந்த குணமுள்ளவளின் இருதயம் பொருளாசையினாலும், பெருமையினாலும், பொறாமையினாலும் நிறைந்திருக்காது. தங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடாமல் தங்கள் செயல்களை ஒரு கட்டுப் பாட்டுக்குள் வைத்திருப்பார்கள். அவர்கள் அமைதியாகவும், அன்பாகவும் இருப்பார்கள்.

அமைதலுள்ள ஆவி பற்றியும் தேவன் 4ம் வசனத்தில் குறிப்பிடுகிறார். அமைதலுள்ள ஆவியையுடைய ஒரு நபர் அமைதியாயும், மென்மைத் தன்மையுடையவராகவும் இருப்பார்கள். அவர்களுடைய மனது போதுமென்று சொல்லக் கூடியதாகவும், வாழ்க்கையில் எதையுமே சுலபமாக எடுத்துக் கொள்ளக் கூடியதுமாய் இருக்கும். அவர்கள் எண்ணங்கள் எல்லாம் சமாதானத்துடன் இருக்கும். அவர்கள் தங்களை சுய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார்கள். அவர்கள் தங்கள் முழு நம்பிக்கையையும், விசுவாசத்தையும் தேவன் மேல் வைத்திருப்ப தால் அவர்கள் எதைப்பற்றியும் கவலைப்பட மாட்டார்கள். எடுத்துக்காட்டாக இயேசுவின் தாயாகிய மரியாளை எடுத்துக் கொள்ளுங்கள். காபிரியேல் தூதன் மூலம் தனக்கு தேவனுடைய குமாரன் பிறப்பார் என்று கேள்விப்படுகிறாள். அங்கு அவளுடைய பதிலைப் பார்த்தால், ''இதோ நான் ஆண்டவருக்கு அடிமை. உம்முடைய வார்த்தையின் படியே ஆகக் கடவது'' என்கிறார்கள். [லூக்கா .1: 38].

தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டவர்களாக கருதப்படும் பெண்கள், பரத்திலிருந்து வருகிற ஞானத்தைப் பெற்றிருக்கிறார்கள் [யாக். 3:17].

அவருடைய எண்ணங்கள் பரிசுத்தமாயிருக்கும். அவளுடைய இருதயம் சமாதானமுள்ளதாக இருக்கும். அமைதலுள்ள ஆவியை பெற்றிருப்பாள். இரக்கமும், நற்கனிகளைக் கொடுக்கக் கூடியவளாகவும் இருப்பாள். அவளிடத்தில் பாரபட்சம் இராது. அவளிடத்தில் மாய்மாலமும் இராது. தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டவளாக காணப்படும் ஸ்தீரி தன் திருமண காரியத்திலும் தேவனுடைய ஞானத்தைக் கையாளுபவளாயிருப்பாள். இப்பேர்ப்பட்ட மனநிலையை நாம் எப்படிப் பெற்றுக் கொள்வது? நம்முடைய ரட்சகராகிய இயேசுவே அதற்கு பதிலாக இருக்கிறார். 1 பேதுரு 2 : 23ம் வசனத்தில் இயேசுவுக்கு இந்த பலம் எங்கிருந்து வந்ததென்றால் இவர் தன்னை தேவனுக்கு அர்ப்பணித்ததன் மூலமாக கிடைத்தது.

மீண்டுமாக ஒரு பெரிய கேள்வி. தேவன் ஏன் சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியை விலையேறப்பட்டதாக விரும்புகிறார்? பதில் 1 பேதுரு 3:1 – 5. இங்கே தேவனுடைய வார்த்தைக்கு செவி கொடாத கணவனை பெற்றுள்ள மனைவிக்கு ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளது.

நாம் சில நேரங்களில் நினைத்து விடுகிறோம். நாம் பேசுகிற பேச்சின் மூலம் மக்கள் மனதை மாற்றி விடலாம் என்று. ஆனால் என்ன பேசுகிறோமோ அதைவிட நாம் என்ன செய்கிறோமோ அதில் தான். மக்கள் அசைக்கப்படுவார்கள். நாம் சில சமயங்களில் நம் கணவன் முன்பு பார்வைக்கு நல்லவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். வெளிப்புறத் தோற்றம் ஒரு பெண்ணுக்கு அழகல்ல. உள்ளத்தில் இருக்கும் சாந்தமும் அமைதலுள்ள ஆவியே அழகாக அமைய வேண்டும்.

நாம் இந்த குணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் நாம் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். ஏனென்றால் அவர் சாந்தமாயும், அமைதியாயும் இருந்தார். தன்னை வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்தார். பாவத்தினால் தேவனிடத்திலிருந்து பிரிந்த நாம் மீண்டும் தேவனோடு ஒப்புரவாக இயேசுகிறிஸ்து மரித்தார். அவருடைய இரத்தம் நமக்கு ஞானஸ்நானத்தின் மூலமாக பாவ மன்னிப்பை கொடுக்கிறது.

ஆணீவே, நாமும் நம்மை வெறுமையாக்கி, அவருக்கு அடிமைகளாக மாறுவோம். நீங்களும், நானும் இந்த சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியை உடையவர்களாயிருப்போம். அப்போது தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டவர்களாக காணப்படுவோம். ✝

வாலிபர் பகுதி

# இரண்டு வழிகள்

**Dr. ஏபில் நாயகம்**

பிரியமானவர்களே, உங்கள் யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். தேவ கிருபையால் இவ்வருடத்தின் முதல் மாதத்தை கடந்து விட்டோம். தேவனடைய வழிநடத்துதலுக்காக அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். கிறிஸபுதவர்களாக வாழும் நமக்க பூமியின் வாழ்க்கை என்பது தற்காலிகரமான ஒன்று என்பதை பலர் அறிந்திருந்தாலும், அந்த சிந்தனையை செயலில் பிரதிபலிப்பவர்கள் மிகவும் சிலரே. குறிப்பாக இந்த வாலிப பருவத்தில், மனம் விரும்பும் பஜ கொள்வதை கடந்து சாமர்த்தியயமாக ஒரு செயலாகவும், பெருமைப்பட்டுக் கொள்ளும் ஒரு விஷயமாகவும் கருதுகிறார்கள். அப்படி செய்யும் பொபது அதை தனி நபராக இல்லாமல், நண்பர்களோடும், அல்லது அவர்களாகவே அமைத்துக் கொள்ளும் குழுவாகவும் இருந்து அப்பஜ செய்கிறார்கள். இந்த விஷயத்தில் நாம் ஞானமுள்ளவர்களாக இருப்பது அவசியம்.

நீதிமொழிகள் 4:10–19 வரை நாம் வசிக்கும் பொழுது இரண்டு பாதைகளைக் குறித்து ஞானி சாலமோன் எழுதியிருப்பதை வாசிக்க முஜயும். நாம் அன்றாட வாழ்வின் ஒவ்வொரா நிலையிலும், இந்த இரண்டு பாதைகளில் ஏதாவது ஒன்றில் நாம் பயணிக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே இவ்விரு பாதைகளைக் குறித்தான ஞானமும் , புரிதலும் அவசியம். ஞானத்தைக் குறித்து நீதிமொழிகள் 4:5,7 ஆகிய வசனங்களில் ஞானத்தை சம்பாதி என்றும் ஞானமே முக்கியம் என்றும் ஞானி சொல்கிறார். ஆகையால் நம்முடைய நடத்தையை குறித்தான ஞானத்தையும், நம்முடைய செயல்களை குறித்தான தெளிவையும் நாம் ஒவ்வொருவரும் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏற்கனவே சொல்லியிருப்பதைப் போல, நமக்கு முன்பாக எப்பொழுதுமே. இரண்டு பாதைகள் இருக்குமு˙. இதில் நல்ல பாதையை தெரிந்து கொள்வது அவசியம்.

நீதி 4:11ல் செல்லையான பாதையைக்குறித்து ஞானி கூறுவதை கவனியுங்கள். செல்லையான பாதை உன்பது சரியான பாதை. இந்த  செல்லையான பாதைகளில் நாம் நடக்கும் போது துன்பம் உண்டாவதில்லை.  அவைகளில் நாம்  ஓடினாலுமு் இடறிவிழுவதில்லை.  இந்த இடத்தில் இன்னொரு வசனத்தை நாம் நினைவு கூர வேண்டும். நீதிமொழிகள் 14:12ல் இப்படியாக வாசிக்கின்றோம். மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள் செம்மையான பாதைகளை தெரிந்து கொள்ள வேண்டும் என்று  புரிந்து கொண்ட நாம், நமக்ண்ச் செம்மையாய் தோன்றுகிற வவியை தெரிந்து கொள்ளாமல் இருப்பது அவசியம். மாறாக தெவனுடைய பார்வையில் எத செம்மையானது என்று  நிதானித்து பார்த்து அதிலே நடக்க வேண்டும்.

வாலிப பிராயத்தில் இடறிவிழாமல் இருப்பது மிக அவசியம். நாம் இடறுவதற்க்கான வாய்ப்புகள் மிக அதிகம். நாம் முன்னெடுத்து வைக்கும் எந்த அடியிலும் நாம் இடறாமல் இருக்க வேண்டுமானால், நாம் தெரிந்து கொண்ட  பாதை சரியானதையாக இருக்க வேண்டும், ( செம்மையான பாதையாக இருக்க வேண்டும்.

நீதிமொழிகள் 3:5,6ல்  அதை நாம் வாசிக்க முடியும் உன் சுயபுத்தியின் மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக் கொள். அப்பொழுது  அவர் உன் பாதைகளை சொல்லைப்படுத்துவார்.

நீதி 4:13 ல்,  இந்த செம்மையான வழியில்  நடக்கும் பொழுது அது நமக்கு ஜீவன் என்று வாசிக்கிறோம். அடுத்ததாக 14–ம் வசனத்தில், துன்மார்க்கருடைய பாதையைக் குறித்து வாசிக்கிறோம். வசனம் 14,15 ல் துன்மார்க்கருடைய பாதையில் பிரவேசியபதே: தீயோருடைய வழியில் நடவாதே, அதை வெறுத்து விடு, அதின் வழியாய் போகாதே; அதை விட்டு விலகிக் கடந்து போ என்று எச்சரிப்பான ஒரு அறிவுரையை வாசிக்க முடிகிறது.

துன்மார்க்கருடைய வழியில் பாவம் மிகுதியாய் இருக்கும். யோவான் 8:34 ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்படியாக சொல்கிறார். பாவம் செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான். ஆம், துன்மார்க்கருடைய பாதையில்

ஒருவர் நடக்கும்பொழுது, பாவத்தின் விலைகளிலே ஒருவர் சிக்கி அதிலிருந்து மீண்டு வராமல் போக வாய்ப்புள்ளது என்பதை நாம் ஞாபகம் கொள்ள வேண்டும்.

சங் 1:1 ல் துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும் பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும் என்று அறிவுறுத்தப்படுவதை கவனியுங்கள்.

இதை வாலிபர்களாகிய நாம் கவனிக்க வேண்டும். ஏனென்றால், நாம் நம்முடைய நண்பர்களை தெரிந்தெடுக்கும் பொழுது நாம் தெரிந்து கொள்ளும் நண்பர்கள் எந்த வழியில் நடக்கிறார்கள் என்பதை நாம் தெரிந்து, செம்மையாய் நடக்கிறவர்களோடு நம் உறவை வைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால் ஆகாத சம்பாதனை நல்லொழுக்கங்களை கெடுக்கும் [I கொரி 15:33].

கடைசியாக 15, 19 வசனங்களில், இவ்விரு பாதைகளும் எப்படிப்பட்ட முடிவை கொடுக்கும் என்று வாசிக்கின்றோம். வசனம் 18 ல் நீதி மான்களில் பாதை பிரகாசிக்கிற சூரியனைப் போல இருக்கும் என்றும் வசனம் 19ல் துன்மார்க்கரின் பாதை காரிருளைப்போலிருக்கும் என்று வாசிக்கிறோம்.

வாலிபர்களே, நாம் ஒளியிலே நடக்க, தெரிந்து கொள்ளப் பட்டவர்கள். எனவே நாம் செம்மையான பாதையில் நடந்தால் மட்டுமே ஒளியின் பிள்ளைகாள இருக்க முடியும். ஒளியில் நடந்தால் மட்டுமே நித்திய ஜீவவனை பெற்றுக் கொள்ள முடியும். எனவே சரியான பாதையை எதரிந்து கொண்டு தேவ மகிமைக்காய் வாழ நம்மை உட்படுத்துவோம். ஆமென். ✝

---

## தேவன் நம்மை எப்படி தேற்றுகிறார்

**தேவன் தம்முடைய பிரசன்னத்தினாலே தேற்றுகிறார்.**

| | | |
|---|---|---|
| ☃ | பிதா | சங்கீதம் 139:5 |
| ☃ | குமாரன் | மத்தேயு 28: 18-20 |
| ☃ | பரிசுத்த ஆவியானவர் | II கொரிந்தியர் 13:17) |

சிறுவர் பகுதி

# பொல்லாங்கை விட்டு விலகுதல்

Dr. *பிரெய்ஸி*

**ஹா**ய் குட்டீஸ்! நீங்கள் எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? பள்ளிகள் இல்லாமல் உங்களுக்கு அலுப்பாக இருக்கும் என்பது எனக்குத் தெரியும், ஆனால் இது தற்காலிகமானது தான். இந்த நாட்களை வேதத்தை வாசிப்பதிலும் நம் பிதாவாகிய தேவனை பற்றி கற்றுக் ொள்வதிலும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். இந்த மாதம் தேவ பயத்தைப் பற்றி உங்களோடு பேசப்போகிறேன்.

பிரியமான பிள்ளைகளே நாமெல்லபரும் தேவனுக்கு பயப்பட வேண்டும், இந்த பயம் பொல்லாப்பை விட்டுவிலக தூண்ட வேண்டும். இப்போது நாம் [யாத்திராகமம் 1:15–21] வசனங்களை நாம் பார்ப்போம். இந்த வசனப்பகுதியில் சிப்பிரான் மற்றுமு் பூவாள் என்னும் பேருடைய எபிரெய மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயத்தினால் எபிரெய ஸ்திரீகளுமக்கு பிறக்கும் ஆண் பிள்ளைகளைக் கொல்லவில்லை [வ 17,18]. இந்த விதமாகவே, உங்கள் எல்லோருக்கும் இப்படிப்பட்ட தேவ பயம் உண்டாகி, பொல்லாங்கிலிருந்து விலகி சரியான பாதையில் நீங்க ளெல்லாரும் நடக்க வேண்டும்.

இந்த எபிரெய மருத்துவச்சிகள் தங்கள் உயிரை துச்சமாக எண்ணி, பொல்லாப்பை விட்டு விலகி பார்வோனின் கட்டளைக்கு கீழ்ப்படியாமல் இருந்ததினால் எப்படி தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் என்று தெரியுமா? தேவன் மருத்து வச்சிகளுக்கு நன்மை செய்தார், ஜனங்கள் பெருகி மிகுதியும் பலத்துப்போனார்கள், தேவன் அவர்களுடைய குடும்பங்கள் தழைக்கும் பஜ செய்தார் [வ 20,21]. அருமையான குழந்தைகளே ! நீங்களெல்லாரும் இதே விதமான தேவ பயம் உடையவர்களாக இருந்து பொல்லாப்பை விட்டு விலகி, தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டு, தேவனுடைய பிள்ளைகளாக உங்களுடைய நண்பர்களுக்கு சிறந்த முன் மாதிரியை காண்பித்து, அவர்களையும் நல்வர்களாக மாற்றுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக! ✝

**அன்புடன்,**
**உங்கள் பிரெய்ஸி அக்கா.**

**சிறுவர்களுக்கான வேதவினாப்போட்டி (யாத்திராகமம் 1: 15-21)**

- சிப்பிரான் மற்றும் பூவாள் என்பவர்கள் யார்?
- பார்வோன் இவர்களை என்ன செய்யும்படி கட்டளையிட்டான்?
- தேவன் இந்த மருத்துவச்சிகளுக்கு என்ன செய்தார்?
- இந்த மருத்தவச்சிகள் பார்வோனுக்கு ஏன் கீழ்படியவில்லை?
- பார்வோன் பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் என்ன செய்ய வேண்டுமென்று ஜனங்களுக்கு கட்டளையிட்டான்?

## இவ்வுலகின் மீது கிறிஸ்துவர்களின் மனப்பான்மை

1. இவ்வுலக வாழ்க்கை குறுகிய கால் அளவை உடையது ஆனால் மரணம் நிச்சயம் (எபிரெயர் 9 : 27)

2. நம் வாழ்க்கை குறுகியதாயிருக்கிற படியால் நாம் பெற்றிருக்கும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பிறர்க்குப் பரிந்து கொடுக்க வேண்டும். ( I தீமோக்கேயும் 6 : 1718)

3. கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்றும் மனநிலை கொண்டிருக்க வேண்டும். (பிலிப்பியர் 1:21)

4. தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு உண்டென்று நிச்சயத்திக்கொள்ள வேண்டும். (II கொரித்தியர் 5 : 12)

# யார் இந்த இயேசு?

Bro. பென்னி மார்ட்டின்

**அ**ருமையான திருமறை ஆசான் வாசகர்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். நம் எல்லோருக்கும் சில முக்கியமான காரியங்களைக் குறித்த உண்மையை அறிய வேண்டுமென்கிற ஆவல் ஆன்மனதில் ஆட் கொண்டிருக்கும். அவைகளைப் பற்றிவ விஸ்தாரமாக விவாதிக்கும் போது முடிவு எட்டப் படவில்லையென்றால் நாம் திருப்தியடையவே மாட்டோம். இது நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பற்றி முழுமையாக அறிந்து கொள்கிற விஷயத்திலும் உண்மையாயிருக்கிறது. இயேசுவைப் பற்றி யாரோ ஒருவருடைய அபிப்பிராயத்தை அறிய நாம் விரும்புவதில்லை. யார் இந்த இயேசு? அவர் உண்மையாகவே தேவனுடைய குமாரனா? இந்த இயேசுவைப் பற்றி பேசாத இலக்கியங்களும் இல்லை, இறையியல் நூல்களம் இல்லை, அவர் எந்தப்புத்தகத்தையும் எழுதவில்லை. ஆனால் புத்தகங்களெல்லாம் அவரைப் பற்றி புத்தம் புது தகவல்களைகத் தருகின்றன. அவர் உலக முழுவதம் பயணிக்கவில்லை. ஆனால் உலக முழுவதும் பயணித்து அவரைப் பற்றி அறிவிக்கிறார்கள். அவர் எந்த பொறியியல் கல்லூரி படிக்கவில்லை. ஆனால் அநேகருடைய ஆவிக்குரிய வாழ்வைக்காட்டி எழுப்பினார். அவர் எந்த மருத்துவக் கல்லூரியிலும் படிக்கவில்லை. ஆனால், அநேகருடைய வியாதிகளை சுகமாக்கினார். மலைப் பிரசங்கத் தினால் நம்மை மலைக்கவைத்த இந்த இயேசு உண்மையாகவே தேவனுடைய குமாரனா? ஜீவனைப்பற்றியும் இரட்சிப்பைப் பற்றியும் அவர் என்ன சொல்கிறார்? இவைகளையெல்லாம் அறிந்து கொள்வதற்கு நாம் போக வேண்டியது இவ்வுலகிலேயே துல்லியமான உண்மையான வேத புத்தகத்திற்குத்தான். கிறிஸ்துவின் போதனைகளை நாம் நிச்சயப்படுத்திக் கொள்ள தேவன் வேதாகமத்தை நம் கைகளில் தந்திருக்கிறார். நம் அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி பல மகான்கள் மனதில் தோன்றியவைகளெல்லாம் தத்துவங்களாக உதிர்த்திருக் கிறார்கள். சிலர் அவரை மாபெரும் போதகர் என்றும் மிகச்சிறந்த மனிதன் என்றும் அலங்கார வார்த்தைகளால் அடையாளப் படுத்துகிறார்கள்? ஆனால் இயேசுவை நாம் எப்படிக் காண்கிறோம்?

I **அவர் இரட்சகராயிருக்கிறார்**

வேத வாக்கியங்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக குறிப்பிடுகின்றன. இரட்சகர் என்னும் வார்த்தை மிகப்பெரிய ஆபத்திலிருந்து மற்றவர்களைக் காப்பாற்றுகிற ஒருவரைக் குறிக்கும், இயேசு ஒரு சாதாரண இரட்சகர் அல்ல, அவர் ஒரு தனித்துவம் வாய்ந்த இரட்சகர். உதாரணமாக, எரிகிற கட்டிடத்திலிருந்து ஒரு மனிதன் ஒரு குழந்தையைக் காப்பாற்றினால் அந்த மனிதனை இரட்சகன் அல்லது காப்பாற்றுகிறவன் என்று சொல்கிறோம். இயேசு கிறிஸ்து வேதவாக்கியங்களின் படி நாம் நம் பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கிற படியால் அவரை நம் ஆவிக்குரிய இரட்சகர் என்றழைக்கிறோம் (மத்தேயு 1:21). பாவமானது ஆரம்பத்தி லிருந்தே மனிதனுக்கு ஒரு பிரச்சனையாக இருந்து வருகிறத. இவ்வுலகில் அநேகர் தங்கள் பாவிகள் என்பதை ஒத்துக்கொள்ள மறுக்கிறார்கள். பிரியமானவர்களே, நாம் ஒவ்வொருவரும் வாழ்க்கையின் ஏதாவது கட்டத்தில் பாவம் செய்திருப்போம், அப்பாவங்களிலிருந்து நம்மை நாமே இரட்சித்துக்கொள்ள முடியாது. சில வேளைகளில் நாம் பாவிகள் என்பதை நமக்ண்ச் சொல்வதற்கு வேதாகமமே தேவையில்லை. நம் வார்த்தைகளை , நம் செயல்களை உற்று நோக்கினால் நாம் பாவிகள் என்பதை உணர்ந்துகொள்வோம். அப்படியென்றால், இந்தப்பாவத்தி லிருந்து நம்மை யாரால் இரட்சிக்ககூடும்? மனோத்துவத்தால் நம்மை மன்னிக்க முடியாது, நேர்மையான சிந்தனையால் நம்மை மன்னிக்க முடியாது. அப்படியானால் நம் கதி என்ன? இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்ததிற்கான பிரதான நோக்கம் நம் பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கும் படித்தான் (ஐ கொரிந்தியர்15:3).

இது சம்மந்தமாக மாவீரன் நெப்போலியனுடைய படையில் ஒரு ராணுவ வீரனின் கதை நம் நெஞ்சைத்தொடுவதாக உள்ளது. இந்த வீரன் துணிச்சலுடைய எஜமான் விசுவாசமுடைய வீரனாக இருந்தான். போருக்கிடையில் அவன் தன் கூடாரத்தில் அமர்ந்து தன் குடும்பத்தைப்பற்றியும் குடும்பத்திற்கு தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டி ருந்தான். அவன் தன் கூடாரத்தில் அமர்ந்து தன் குடும்பத்தைப் பற்றியும், குடும்பத்திற்கு தான் நிறைவேற்ற வேண்டிய கடமை களைக் குறித்தும் சிந்தித்துக் கொண்டிருந்தான். அவன் ஒரு நாள் தனக்கிருந்த கடனையும், தன் குடும்பத்தைப் பராமரிப்பதற்குத் தேவையான பணத்தையும் ஒரு த ாளில் எழுதிக்கொண்டிருந்தான்

தன் கடனை திருப்பி செலுத்துவதற்கும், குடும்ப செலவிற்கும் தேவையான பணம் தன்னிடம் இல்லாததை எண்ணி சோர்வில் ஆழ்ந்து போனான். மிகுந்த மனச்சோர்வில் அந்தத்தாளின் அடிப்பகுதியில் இந்தக்கடன்களை தீர்ப்பதற்கு யார் இருக்கிறார்? என்று எழுதினான், பின்பு தூங்கச் சென்றுவிட்டான். அந்த நாளில் நெப்போலியன் தன் வீரர்களின் கூடாரத்தைப் பார்வையிடும்படியும், அவர்களுடைய நிலைமையை ஆராயும் படியாகவும் திடீரென வந்தார். அப்போது, தூங்கிக் கொண்டிருந்த அந்த வீரனையும், அவன் எழுதிவைத்திருந்த கடிதத்தையும் பார்த்தார். அப்போது நெப்போலியன் தன் போனாவை எடுத்து, நான் இதை கட்டித்தீர்ப்பேன் என்று எழுதினார். பிரியமானவர்களே, நம் பாவக்கடனை கட்டித்தீர்ப்பதற்கு இவ்வுலகில் நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைத்தவிர வேறு யாருண்டு?

II **அவர் கிறிஸ்துவாயிருக்கிறார்**

இரண்டாவதாக, நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்றழைக்கப்படுகிறார். கிறிஸ்து என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்று பொருள், கிரேக்க மொழியில் கிறிஸ்து என்பதும், எபிரெய மொழியில் மேசியா என்பதும் ஒன்று தான். புதிய ஏற்பாடு இயேசுவை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட ஒருவராக, தேவனால் தெரிந்தேடுக்கப்பட்டவராக அடையாளப்படுத்துகிறது. தீர்க்கதரிசிகள் கிறிஸ்து வரப்போவதை முன்னறிவித்தார்கள் (ஏசாயா 9:6,7) மீகாவின் தீர்க்கதரிசனத்தை சற்று உற்று நோக்குங்கள். எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு என்னிடத்தில் வருவார், அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத் என்னிடத்தில் வருவார், அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது (மீகா 5:2). மேலும், புதிய ஏற்பாடு தீர்க்க தரிசிகளால் முன்னறிவிக்கப்பட்டவர் கிறிஸ்து என்பதை நிரூபிக்ணுறது. இயேசு கிறிஸ்து தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தின் இறுதிப்பகுதியில் தம்முடைய சீஷர்களிடம் அவ்விதமாகக் கேட்டார். மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார் (மத்தேயு 16:13). அதற்கு அவர்கள் சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும் வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளுள் ஒருவர் என்றும் சொல்கிறார்கள் என்றார்கள். அவர்களுடைய பதிலுக்குப் பிறகு

இயேசு அவர்களைகப் பார்த்து நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். புதிய ஏற்பாடு இயேசுவை கிறிஸ்துவாக தேவனால் விசேஷமாக தெரிந்தேடுக்கப்பட்ட ஒருவராக அடையாளப்படுத்துகிறது. இப்படிப்பட்ட கிறிஸ்துவை நாம் நம் இரட்சகராக பெற்றிருப்பது நாம் பெற்ற பாக்கியமாகும்.

III **அவர் தேவனுடைய குமாரனாயிருக்கிறார்**

மூன்றாவது, புதிய ஏற்பாடு இயேசுவை தேவத்துவத்தில் ஒருவராக, தேவனுடைய குமாரனாக அடையாளப்படுத்துகிறது. யோவான் ஸ்நானன் இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்திற்கு வழியை ஆயத்தப்படுத்தும்படி தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டார் அப்போஸ்தலனாகிய யோவான் இயேசு தேவனுடைய குமாரன் என்பதற்கு நமக்கு மூன்று சாட்சிகள் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார். பூலோகத்திலே சாட்சியாயிருக்கிறவைகள் மூன்று ஆவி ஜலம், இரத்தம் என்பவைகளே. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது [ஐ யோவான் 5:8]. பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸபுது ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே, அவர்மீது புறாவைப் போல இறங்கி இயேசு தேவனுடைய குமாரன் என்று சாட்சி பரித்தார். ஐ யோவான் 5:8ல் ஜலம் இயேசுவின் ஞானஸ் நானத்தைத்தான் குறிக்க வேண்டும். அவர் ஞானஸ்நானம் பெற்று கரையேறினவுடனே இவர் என்னுடைய நேச குமாரன் .வகில் பிரியமாயிக்கிறேன் என்று மத்தேயு 3:17 ல் நாம் வாசிக்கின்றோம். இயேசு சிலுவையில் அறையப்பட்டபோது நடந்த அற்புத சம்பவங்கள் விவரிக்கிறது. இயேசு தேவனடைய குமாரன் என்பதைக் குறித்து தேவனே பரிசுத்த ஆவியானவரே சாட்சி கொடுக்கும் போது அதைவிட மேலான சாட்சிபாது அதைவிட மேலான சாட்சி யாருக்கும் அவசியமில்லை.

யார் இந்த இயேசு? இதற்கான பதிலைப் பற்றிய எந்த சந்தேகத்தையும் புதிய ஏற்பாடு நமக்கு விட்டு வைக்கவில்லை. மேலும், புதிய ஏற்பாடு இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதை மிகத்தெளிவாகப் போதிக்கிறது. எனவே, நாம் இயேசுவை கிறிஸ்துவாக தேவனுடைய குமாரனாக இரட்சகராக காண்போமென்றால் அவரிடத்தில் அன்பு கூர்ந்து, அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள பாடுபடுவோம். தேவன் தாமே அதற்கு உதவிச் உதவிச்செய்வராக ஆமென்!

## *உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்*

**Bro. பாண்டியன்**

இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்ட முதல் தீர்க்கதரிசனம் ஆதி 3:15 ல் தேவன் சாத்தானிடம் சொன்னது மனித குலத்தை வஞ்சித்த பிசாசிடம் உனக்கும் ஸதிரீக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்ண்வார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். ஆதி 3:15) பிசாசின் தந்திரத்தினால் தேவனை விட்டு விலகிய மனிதனை அப்படியே விட்டுவி மனமில்லாமல் அவர்களில் சிலரை தேர்ந்தெடுத்து தேவபக்தியுள்ள சந்ததியை உருவாக்க தேவன் சித்தமானார். பூமி அக்கிரமத்தால் நிறைந்த போது வெள்ளத்தால் ஜனங்களை அழிக்க ஆயத்தமானார். அப்போது நோவா முதலான எட்டுப்பேர் காப்பாற்றப்பட்டனர். பின்பு உருவான மக்கள் தொகையில் தேவன் ஆபிரகாமை தெரிந்து கொண்டு முதிர் வயதில் அவனுக்கு ஒரு மகனையும் பின்பு அவனுக்குப் பிறந்த யாக்கோபின் மூலம் இஸ்ரவேலன் என்ற ஜனக்கூட்டத்தையும் உருவாக்கினார்.

மேற்கண்ட வசனத்தில் குறிப்பிட்ட உனக்கும் ஸ்திரீக்கம் என்பது பிசாசையும் இஸ்ரேல் மக்களையும் குறிப்பதாக உள்ளது. ஐ யோவா 3:8 ன் பஜ பிசாசு ஆதி முதல் பாவஞ்செய்கிறவனாக, மனுஜ கொலை பாதகனாக, அன்பு என்ற குணாதிசயத்தை அழிப்பவனாக இருக்கிறான். தேவ பக்தியுள்ள சந்ததியைப் பெறும் படிக்கு ஆணும் பெண்ணுமாக சிருஜ்டிக்கப்பட்ட மனிதகுலத்தை (மல்கி 2:15) கண்களின் இச்சை, மாம்சத்தின் இச்சை மனுஜன் விபச்சாரம், வேசித்தனம், விக்கிரக ஆராதனை போன்ற பாவங்களில் விழுந்து தேவனிடம் மக்கள் ஒப்புரவாகதபடி பிசாசு தந்திரம் செய்கிறான். அதனால் வேதம் அவனை இந்த உலகத்தின் அதிபதியாக வர்ணிக்கிறது. யோவா 14,30. மேலும் இப்பிரபஞ்சத்தின் தேவன் என்றும் மரணத்துக்கு தேவனிடமிருந்து மனிதனைப்பிரிப்பது) அதிகாரியான அவனுடைய கிரியைகளை அழிக்கும் படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் என்றும் (ஐ யோவான் 3:8) காண்கிறோம். பிசாசு அவிசுவாசிகளின் மனதைக் குருடாக்குகிறான். மாறாக விசுவாசிகளுடைய

மனக்கண்கள் திறக்க வேண்டுமென பவுல் அப்போஸ்தலன் வேண்டிக் கொள்கிறான். (2 கொரி 4:4 – எபே 1:19). தேவ பிள்ளைகள் பிசாசுக்கு இடங்கொடுக்கக் கூடாது (எபே 4:27). முடிவில் தேவன் மோசம் போக்குகிற பிசாசானவனை அக்கினிக்கடலில் தள்ளுவார் வெளி 20:10.

இயேசுவைப் பற்றிய இந்த முதலாம் தீர்க்க தரிசனத்தில் ஸ்திரீ என்பது இஸ்ரவேல் ஜனங்களை குறிப்பதாக உள்ளது. மாறாக, சிலர் மரியாள் என தவறாக நினைத்துக்கொள்ளுகிறார்கள். தேவனுக்குக் கீழ்ப்படிந்து பிசாசுக்கு முதிர்த்து நிற்பது தேவனைப் பின்பற்றும் யாவரும் செய்ய வேண்டியதேயன்றி மரியாள் மட்டுமல்ல என்பது தெளிவு. மாறாக ஸ்திரீ என்பது தேவனைப் பின்பற்றி வணங்கி வந்த இஸ்ரவேல் ஜனத்தைக் குறிக்கம். தேவனை மணவாளன் என்றும் அவருடைய ஜனங்கள் மணவாட்டி என்றும் குறிப்பிடுகிறது.

இஸ்ரவேல் ஜனங்களளைப் பற்றி பவுல் குறிப்பிடும் போது பிதாக்கள் அவர்களுடையவர்களே; மாம்சத்தின்படி கிறிஸ்துவும் அவர்களில் பிறந்தாரே என்று குறிப்பிடுவதை ரோமர் 9:5 ல் பார்க்கிறோம். எனவே அவள் வித்து என்பது கிறிஸ்துவையும் ஸ்திரீ என்பது இஸ்ரவேல் ஜனங்களை குறிப்பதாய் இருப்பதை உறுதி செய்யலாம்.

இவ்வசனத்தில் வித்து எனப்படுவது விதையைக் குறிக்கிறது. பொதுவாக மரம், செடி, கொடி வகைகளை உற்பத்தி செய்வதைத் தான் விதைகள் என்பார்கள். இயேசுவும் தாம் சிலுவையில் மரிக்கப் போவதைக் குறிக்க கோதுமை மணி நிலத்தில் விழுந்து சாகவிட்டால் மிகுந்த பலனைக் கொடாது (யோவா 12:23,24) எனக்குறிப்பிட்டார். இங்கு ஒரு விதையிலிருந்து அநேக மணிகள் உருவாகிறதைப் போல ஒரு கிறிஸ்து நமது பாவங்களுக்காக மரித்ததுஇ அநேக கிறிஸ்தவர் களை உற்பத்தி செய்கிறது. அப்படிப் போலவே பிசாசினால் வஞ்சிக்கப்பட்ட மனிதர்களின் நினைவுகள் நித்தமும் பொல்லாததே என தேவன் கண்டார் (ஆதி 6:5,6). இப்படிப்பட்ட இரு வேறு துருவங்களுக்கே பகையை உண்டாக்குவேன் என்று தேவன் ஆதியிலே தீர்க்கதரிசனமான முன்னரைத்தார்.

பகையைப்பற்றி பார்க்கும் போது, தமது சிஷர்களிடம் இயேசு சொல்லும் போது, உங்களை உலகம் பகைத்தால் அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்தது என்று அறியுங்கள் என்றார் (யோவா 15:18) நியாயப்பிரமாணத்தைக் குருட்டுத்தனமாகப் பின்பற்றிய பரிசேயர், சதுசேயர் கூட்டம்

நிபி. நிறைவேற்றி வந்த இயேசு ஆண்டவரை முகாந்திரமில்லாமல் பகைத்தார்கள். யோவா 15:24,25. பிசாசு கிறிஸ்தவர்களை பகைப்பதற்கு மற்றொரு காரணம் தேவனுடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது. எனவே அவன் பாவஞ்செய்யான் [ஐ யோவா 3:9] மேலும் நாம் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிந்து சகோதர அன்பில் நடந்துகொள்ளும் போது நமது ஒறவினர்களுடன் பகை உண்டாகலாம் [மத் 10:35-37], உலகம் உங்களைப் பகைத்தால் ஆச்சரியப்படாதிருங்கள் என்கிறான் மூப்பனாகிய யோவான்.

அவர் உன் தலையை நசக்குவார் என்பது இயேசுவின் சிலுவை மரணத்தில், மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசான வனை அழித்ததை குறிக்கிறது [எபி2:14]. இஸ்ரவேலரும் புறஜாதி யாவருக்கும் இருந்த பக்தி ரீதியான பகையை இயேசு சிலுவையில் சென்றார் [ எபேசு 2:1416]. அப்படிப்போல குதிங்காலை நசுக்குவாய் என்பது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை பிசாசானவன் துன்பப்படுத்துகிறதை குறிப்பதாய் உள்ளது. கிறிஸ்துவின் சபை ஆரம்பமான எருசலேமில் யூதர்களாலும், அரசாங்க அதிகாரங்களாலும் மிகுந்த துன்பம் உண்டாயிற்று [அப் 8:1]. ஏற்கனவே தமது சிஷர்களிடம் ஆண்டவர் உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு என்றும், கோதுமையை சுளகினால் [முறத்தினால்] புடைக்கிறது போல சாத்தான் உங்களை புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக் கொண்டான் [ லூக் 22:31] மற்றும் வெளி 12:17லும் இதைக் குறித்து வாசிக்கலாம் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார் இயேசு. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்குத் ஸ்தோத்தரம்.

---

## நதைம் எனும் தைலம்

இத்தைலம் இமயமலையில் வளரும் ஜதமன்சி என்னும் செடியிலிருந்து எடுக்கப்படும் ஒரு விலையேறப் பெற்ற தைலமாயிருக்கிறது. அதன் வேரிலிருந்து எடுக்கப்படும் ஒரு விலையேறப் பெற்ற தைலமாயிருக்கிறது. அதன் வேரிலிருந்து கொத்தாக முளைத்து எழும்பும் முட்களால் அது மற்றச் செடிகளிலிருந்து தன்னை வேறுபடுத்திக் காட்டுகிறது.

# மரணம்

**Bro. K.M. பிலிப்**

**அ**ன்பானவர்களே! உங்கள் யாவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள், இம்மாதத்தின் தலைப்பு சற்று அதிர்ச்சியைக் கொடுக்கும் என்று எண்ணுகிறேன். ஆனால் கட்டுரையின் நிறைவில் நீங்கள் தெளிவும்,தைரியமும், மகிழ்ச்சியும் அடைவீர்கள் என்று விசுவாசிக்கிறேன். மனித வாழ்க்கையில் பிறப்பு உண்டானால் இறப்பு நிச்சயம் உண்டு. **ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை** [பிர.8:8] என்பதை ஞானி தெளிவுபடுத்தியிருக்கிறார். இந்த ஆவியின் உலகில் பிறப்பைக் கூடத் தவிர்த்து விடலாம்; ஆனால் இறப்பை தவிர்க்கவே முடியாது. இது தேவ திட்டம், **அன்றியும் ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்பு அடைவதும், மனுஷருக்கு நியமிக்கப் பட்டிருக்கிறபடியே,** [எபி9:27] என்று பரிசுத்த ஆவியானவர் திட்டமாய் கூறுகிறார். ஆம், நம்மை பிறப்பிக்கச் செய்கிற தேவன் தாமே நம் மரணத்தையும் திட்டமிடுகிறார். தேவன் செய்வது எதுவோ அது சரியாயிருக்கும். இதில் விசேஷம் என்னவென்றால் உயிரோடிருக்கும் மனித இனம் மட்டுமே தான் மரிப்பதை அறிந்திருக்கிறான் [பிர 9:5]. ஆனால் பிறப்பை ஏற்றுக்கொண்டு பெருமளவும் மகிழ்ச்சியுமடைகின்ற மனிதன், மரணத்தைக் குறித்து பயப்படுகிறான், கவலைப்படுகிறான். ஆனால் ஒன்று நிச்சயம், **ஒருவரும் மரணத்திற்குத் தப்ப முடியாது. மரண பயத்திற்குத் தப்ப முடியும்.** மரணத்தை மகிழ்ச்சிக்குரியதாய் மாற்ற முடியும். காரணம் ஒருவனது ஜநக நாளைப் பார்க்கிலும் மரண நாளும் நல்லது. [பிர 7:11] என்றும், கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்யவான்கள்.... [வெளி 14:13] என்றும், தேவனுடைய பிள்ளைகள் பிழைத்தாலும், மரித்தாலும், பாக்யவான்களே! என்ற நிலையை தேவன் அருளிய வேதம் மட்டுமே சரியாய், தெளிவாய் கூறுவதைக் கூர்ந்து கவனித்து, மரண பயத்தை நீக்கி, எந்நிலையிலும் மகிழ்ச்சிக்குரியவர்களாய் வாழ்வோம்.

இந்த நவீன உலகத்தில் நாம் விண்ணையும், மண்ணையும் ஆராய்ந்து அறிந்திருக்கிறோம். ஆனால், நம் மரணத்தைக்

குறித்து எப்பொழுதாவது ஆராய்ந்ததுண்டா? எவ்வளவு பெரிய வாழ்க்கை வாழ்ந்தாலும் மரணத்தை சந்திக்கும்போது பயம், துக்கம், கலக்கம் நேரிடுவதைப் பார்க்கிறோம். ஆனால் வேதத்தை ஆராய்ந்தால் மட்டுமே மரண பயத்தை நீக்கி, மரணத்தை மகிழ்ச்சியோடு சந்திக்க முடியும். மனித பிறவியில் ஏழு பிறவியில்லை. ஒரே பிறவிதான் [எபி 9:27]. இவ்வாழ்வில் மரணம் முடிவல்ல; **முடிவற்ற வாழ்க்கையின் துவக்கம்** என்பதை வேதம் மட்டுமே வெளிப்படுத்துகிறது. அந்த முடிவற்ற வாழ்க்கையின் முதல் பகுதி குறித்து இயேசு கூறிய உவமையில் காண்கிறோம். ஏழை லாசருவும், ஐசுவரியவானும் மரிக்கிறார்கள். மரித்த லாசரு தேவதூதரால் ஆபிரகாமின் மடியில் கொண்டுபோய் விடப்படுகிறான். ஐசுவரியவானோ வேதனையுள்ள பாதாளத்தில் விடப்பட்டான் [லூக் 16:19-31] என்று பார்க்கிறோம். மேலும் இயேசுவோடு மரித்த சிலுவைக் கள்ளன் பரதீசுக்குள் பிரவேசித்தான் [லூ 23:43] என்றும், ஜெயங்கொள்ளுகிறவன் பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவ விருட்சத்தின் கனியை புசிப்பான் [வ 2:7] என்பதன் மூலம் கிறிஸ்துவுக்குள் [ஞானஸ்நானத்தின் மூலம்] மரித்தவர்கள் இளைப்பாறும் படியாய் பரதீசுக்கும்; தேவனற்றவர்களும், துன்மார்க்கரும், பாவிகளும் பாதாளத்திலும் விடப்படுவார்கள் என்றும் [சங் 31:17: ஏசா 14:15] காண்கிறோம். இரண்டாம் பகுதியில் கிறிஸ்துவின் வருகையில் நீதிமான்களும், அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்த்தெழுவர் [அப் 24:15] தேவன்கிறிஸ்துவைக் கொண்டு எல்லோரையும் நியாயந்தீர்ப்பார் [மத் 25:31-46]. கிறிஸ்துவுக்குள் மரித்து, ஜீவ புஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டவர்களும், கிறிஸ்துவோடு கூட பரலோகத்திற்குள் பிரவேசிப்பார்கள் [ரோம:3;21,27]. மற்றவர்கள் பிசாசுக்காகவும், அவளது தூதர்களுக்காகவும் ஆயத்தப்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்னியுள்ள நரகத்தில் தள்ளப்படுவார்கள். இந்த நித்திய வாழ்வில் நாம் எங்கேயிருப்போம் என்பதை முடிவெடுப்பது இப்பூலோக வாழ்விதான். அது பரலோகம் தான் என்ற உறுதியுடன் வாழ்ந்தால் நம் மரணம் பயமற்றதாகவும், மகிழ்ச்சிக்குரியதாகவும் இருக்கும்.

இங்கு மரண பயத்திற்கு நீங்கி, சாதாரண பலபுரிந்த தேவ பிள்ளைகளை நம் முன் நிறுத்தி நோக்குவோம். ஆதித்திருச் சபையாரின் வாழ்க்கையில் எருசலேமில் சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. விசுவாசிகள் காவலில் சபைக்கு மிகுந்த

துன்பம் உண்டாயிற்று. விசுவாசிகள் காவலில் போடப்பட்டார். எங்கும் சிதறடிக்கப்பட்டனர். ஆங்காங்கே சபையைப் பாழாக்கினர். யாக்கோபு, ஸ்தேவான் போற்ற திறமை மிக்க ஊழியர்கள் கொலை செய்யப்பட்டனர். ஆனாலம் சபையார் மரணத்திற்கு முன் மண்டியிடவில்லை. மாறாக, எழும்பிப் பிரகாசித்தார்கள். எங்கும் சுற்றித்திரிந்து சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். விசுவாசிகள் பெருகினார். சபைகள் சமாதானம் பெற்று விருத்தி அடைந்தது. சபை கர்த்தருக்கு பயப்படுகிற பயத்தோடு வளர்ந்தது. (அப் 2-11). மரணபயம் நீங்கிற்று. மட்டுமல்ல எதிரிகள். இதோ உலகத்தைக் காக்குகிறவர்கள். இங்கேயும் வந்துவிட்டார்கள் என்று இவர்களைக் கண்டு பயப்பட்டார்கள் ( அப் 17:6). எங்கள் மரணம் கர்த்தருடைய பார்வைக்கு அருமையானது என்பதை சபையார் தெளிவாய் புரிந்து கொண்ட மரணத்திற்கு எதிர்த்து நின்று சாதித்துக் காட்டினார்கள்.

அன்பான சபையாரே! நமக்குக் கிடைத்த இந்த வாழ்க்கையில் மரணபயத்தை நீக்கி, ஒரே இருதயமும், ஒரே மனமுள்ளவர்களாய் ஊழியரோடு இணைந்து இறைப்பணி செய்வோம். சபை வளர்ச்சிக்கு நம்மை அர்ப்பணிப்போம். நம் மரணத்தில் நம் நற்கிரியைகள் நம்மோடு கூட வரும் (ரோ 2:6). இயேசுவின் வருகையில் நம் கிரியைக் தேற்றபலன் அவர் நமக்களிப்பார் (வெளி 22:12). அந்த நமக்களிப்பார் (வெளி 22:12). அந்த பலன் பரலோகமே!

நம் மரணத்தைக் குறித்து தேவனுடைய விருப்பத்தை தெரிந்து கொண்டால் நலமாயிருக்கும். நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியை விட்டுத்திரும்பி பிழைப்பதையே விரும்புகிறேன் என்று தேவன் தன் விருப்பத்தை தெரிவிக்கிறார், (எசே 33:11). நாம் பரிசுத்தம் ஆக வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது (ஐதெ: 4:3). அதற்காகவே தன் ஒரே பேரான குமாரனை கல்வாரிச் சிலுவைக்கு ஒப்புக் கொடுத்தார். அந்தப்படியே இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தை பரிசுத்தஞ் செய்யும் படியாக நகர வாசலுக்கு புறம்யே பாடுபட்டனர் (எபி 13:12). இந்த கிறிஸபுதுவின் மரணத்திற்கு ஒப்பான ஞானஸபு நானத்தின் மூலம் பரிசுத்தமாக்கப்பட்ட நம்மை கர்த்தர் தமது

சபையில் சேர்த்து காத்து வருகிறார் [அப்.2:42]. இப்பொழுது நாம் செய்ய வேண்டியது, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும் படிக்கு [பிலி 3:10] நாம் கறையற்றவர்களும், பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும் படி ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். [பே 3:14]. ஆம் மீண்டும் நம்மில் பாவக்கறை ஒன்றும் படியாமலும், வேத சட்டத்திற்குட்பட்டு, [ரோ 6:17 II தீ1:13] வசனத்தோடு ஒன்றையும் கூட்டாமலும், குறைக்காமலும் [பிர 3:14], வசனத்திற்கு மிஞ்சி எண்ணாமலும் [I கொ 4:6]. பிழையற்ற வாழ்க்கை வாழ உறுதியெடுப்போம். மரணத்தின் மீது ஜெயம் பெற்றவர்களாய் இயேசுவோடு கூட சிங்காசனத்தில் வீற்றிருக்க அவர் அருள் செய்வாராக! ஆமென்!!

## நாளும் நடப்பும்

1. தமிழகத்தில் 2 ம் தவணையாக கொரோனா தடுப்பூசி செலத்தும் பணி தொடங்கியது.
2. வாழை கழிவுகளில் விமான பாகம் தயாரிக்கலாம் - மயில்சாமி அண்ணாதுரை
3. முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணிக்கான போட்டித் தேர்வு ஜூன் 26,27 தேதிகளில் நடைபெறுகிறது.
4. இந்தியாவில் 1.06 கோடி பேர் கொரோனாவில் இருந்து மீண்டனர்.
5. குடியேற்ற நடைமுறையில் மாற்றம் வெள்ளை மாளிகை அதிகாரி தகவல்.

## கிறிஸ்துவின் மாபெரும் உபதேசங்கள்

# உபதேசங்கள் தேவனுடையது

Bro. **ஆசீர்வாதம்** சென்ற இதழின் தொடர்ச்சி...

### B. உபதேசங்கள் கிறிஸ்துவுக்கு ஒப்புவிக்கப்பட்டது.

பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும் தீர்க்கதரிசிகள் மூலமாக பிதாக்களுக்கு திருவுளம்பற்றின தேவன். இந்த கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார் [எபி 1 : 1,2] கிறிஸ்துவுக்கு முன்னான காலங்களில் தேவனுடைய பிள்ளைகளாயிருந்த முற்பிதாக்களுக்கு தீர்க்க தரிசிகள் மூலமாய் தம்முடைய சித்தத்தையும், தம்முடைய கட்டளைகளையும் வாக்குத்தத்தங்களையும் ஆசீர்வாதங்களையும் வெளிப்படுத்தின தேவன், இந்த கடைசி நாட்களில் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள அழைக்கப்படுகிற யாவருக்கும் தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் தம் முடைய சித்தத்தையும் தம்முடைய கட்டளைகளையும் வாக்குத் தத்தங்களையும் ஆசிர்வாதங்களையும் வெளிப்படுத்துகிறார். சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டி ருக்கிறது. [மத்தேயு 11 : 27] தம்முடைய குமாரனிடத்தில் விசுவாசமா யிருப்பவனை நீதிமானாக்கி, நீதியினாலே நித்திய ஜீவனை அளிக்கும் தேவன், அதை சுதந்தரித்துக்கொள்ள விரும்புகிற ஒவ்வொரு மனுஷ ஆத்துமாவும் நிறைவேற்ற வேண்டிய கட்டளைகளையும் அதற்குரிய வாக்குத்தத்தங் களையும் இயேசுவினிடத்தில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

### a. இதற்கு வேதத்திலுள்ள சாட்சிகள்

- **யோவான் 1 : 17** நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது. கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின.
- **வெளி 1 : 1** சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளை தம்முடைய ஊழியக்காரருக்கு காண்பிக்கும் பொருட்டு, தேவன் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும்....
- **யோவான் 12 : 49, 50** நான் சுயமாய் பேசவில்லை , நான் பேச வேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது – இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக் கிறதென்று அறிவேன், ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்.

❀ **யோவான் 3 : 35** பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக் கொடுத்திருக்கிறார்.

❀ **யோவான் 5 : 36** நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்து வருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக் குறித்துச் சாட்சிக் கொடுக்கிறது.

❀ **யோவான் 8 : 28** நான் என் சுயமாய் ஒன்றும் செய்யாமல் என் பிதா எனக்கு போதித்தபடியே இவைகளைச் சொன்னேன் என்றும் அறிவீர்கள்.

❀ **யோவான் 8 : 40** தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னை கொல்லத்தேடுகிறீர்கள்

❀ **யோவான் 18 : 37** சத்தியத்தை குறித்துச் சாட்சிக் கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன், சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான்.

❀ **யோவான் 14 : 25** நான் உங்களுடனே தங்கியிருக்கை யில் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்.

மேற்கண்ட வசனங்களின் மூலமாக நாம் கற்றுக்கொள்கிற சத்தியம் என்னவென்றால், இயேசுவானவர் யோவான் சுவிசேஷத்தில் சொல்லுகிறபடி உபதேசங்கள் தேவனுடையது. என் உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதா யிருக்கிறது (7 : 16) என் பிதா எனக்குப் போதித்தார் (8 : 28) என் பிதா எனக்குக் கற்றுக் கொடுத்தார், (5:36) என் பிதா எனக்குச் சொன்னார் (12 : 50), நான் எதைப்பேச வேண்டும் எதை உபதேசிக்க வேண்டும் என்று என் பிதாவே எனக்கு கட்டளை யிட்டார், சத்தியத்தைக் குறித்துச் சாட்சிக் கொடுக்கவே நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன் என்று இயேசுவானவர் சொல்லுகிறார். ஆகையால உபதேசங்கன தேவனுடைய இருதயத்திலிருந்து உண்டானவைகள், அவைகள் தேவனுடைய மனதிலே தோன்றினவைகள், அந்த உபதேசங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கிறிஸ்துவின் உபதேசங்களாயின. கிறிஸ்துவின் மூலமாய் நமக்கும்

உரியவைகளுமாயிருக்கின்றன. கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறிநடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன் (2 யோவா 9)

## b. தேவனுடைய சாட்சி : இவருக்கு செவிக்கொடுங்கள்


**யோவான் 5 : 9** நாம் மனுஷருடைய சாட்சிகளை ஏற்றுக் கொண்டால், அதைப்பார்க்கிலும் தேவனுடைய சாட்சி அதிகமாயிருக்கிறது. ஆம் இயேசுவைக் குறித்து, மனிதர்கள் கொடுத்த சாட்சிகளைப் பார்க்கிலும் தேவன் இயேசுவைக் குறித்து கொடுக்கின்ற சாட்சி அதிகமாயிருக்கிறது, அது மேன்மையுள்ளதாயுமிருக்கிறது.


### 1. தேவனுடைய நேரடியான சாட்சி

மத்தேயு 3 : 17 அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தமுண்டாகி, இவர் என்னுடைய நேசக்குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. மத்தேயு 17 : 5 இதோ ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது, இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று. யோவான் 12 : 28 பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்தும் என்றார். அப்பொழுது, மகிமைப்படுத்தினேன், இன்னமும் மகிமைப்படுத்துவேன் என்கிற சத்தம் வானத்திலிருந்து உண்டாயிற்று. இயேசுவானவர் சாதாரண மனிதனாக உலகத்தில் வாழ்ந்து தேவனுடைய சித்தத்தை தம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றிக் கொண்டிருக்கையில், உன்னதமான மகிமை யிலிருந்து இந்த சாட்சியைப் பெற்றார். இவர் என்னுடைய நேசக்கு மாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று சொன்னதுமல்லாமல் இவருக்கு செவிகொடுங்கள் என்றும் தேவன் சொன்னார். இயேசுவுக்கு நாம் செவிக்கொடுக்க வேண்டுமென்பதே அந்த சாட்சியாகும். ஆகையால் இயேசு கிறிஸ்துவுக்கு செவிகொடுத்து அவருக்கு கீழ்படிந்திருக் கிறவர்கள், தேவனுடைய சாட்சியை ஏற்றுக்கொண்டு, அந்த சாட்சியை தங்களுக்குள் நிறைவேற்றுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

தொடரும்...


12 வித்தியாசமான தலைப்புகளில் கைப்பிரதிகள் கிடைக்கும்.
தேவைக்கு எங்களைத் தொடர்பு கொள்ளவும்.

















# World Evangelism Gospel Media

Rajanayagam & Benny Martin On Tamilan TV
Every Saturday 7:00 - 7:30 am

Rajanayagam & Benny Martin On Nambikkai TV
Every Friday 7:30 - 8.00 am

Arjunan on Nambikkai TV
TV : On Monday & Saturday 7.30 - 7.45 pm

Hindi TV Program : Sunny, Francis & Vinay David Speaking
Sunday & Tuesday ( 7:00 - 7:30 ) pm on
Shubhasandesh Hindi Channel

P.K. Varghese In Malayalam :
Every Saturday 6:00 - 6:30 am on Jai Hind Channel TV

Philemon & Kingsley on Tamilan TV and Nambikai TV :
Every Sunday 6:45 - 7:00 am
Every Friday 6.00 - 6.30 am
Joy TV - Saturdays 9.00 pm Salvation TV - Every Sunday 2.00 pm

Joshua & Ricky Gootam In Telugu:
Every Saturday at 6:00 pm Subhavartha Channel
Every Wednesday at 6:30 pm on Rakshana Channel
Every Thursday at 11:00 am on Rakshana Channel
Satyavani T.V. online : www.sakthitv.in
Every Wednesday & Friday at 8.00 pm

For English Voice of Truth
Contact - Brothers Philemon or Kingsley
@ Po box 15 , 45/c1 Church Lane, Coronation Street,
Arasaradi, Madurai - 625016
9244204420 / 21, 0452 - 2607026



Regd. News Paper RNI No. TNTAM/2006/20446
Postal regn. No. Erode/26/2021 - 2023
Posted at Erode HPO on 20/21 of Every Month.
**Licensed to Post without pre payment**
**No: TN / WR / ERD / 03 / WPP / 2021 - 2023**
Published on 17/18 th of Every Month

# எங்களது இதர வெளியீடுகள்









சர்வதேச தரத்தில், தலை சிறந்த
பிரசங்கிகளால் எழுதப்பட்ட
**சத்தியத்தின் குரல்**
என்ற நூல் வேண்டுவோர்
எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
– ஆசிரியர்

தபால் செலவிற்கு பணம் அனுப்பி இந்நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம்




## திருமறை தியானம்

நம்பிக்கை தொலைக்காட்சியில்
வெள்ளி காலை 7:30 - 8.00 மணி
தமிழன் தொலைக்காட்சியில்
சனி காலை 7.00 - 7.30 மணி








## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

- Advanced Bible Correspondence Course -

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு 7 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட 100 பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள்
மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.







இயக்குனர்

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**

த.பெ.எண் 27, காங்கேயம் 638–701.
தமிழ்நாடு , இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.